**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை**

**நல்லூர் ஊராட்சி ஒன்றியம்**

**அறிவிப்பு எண் அ1/2348/2025** **நாள்: .12.2025**

கடலூர் மாவட்டம், நல்லூர் ஊராட்சி ஒன்றியத்தில், ஒன்றிய தலைப்பின்கீழ் காலியாக உள்ள ஈப்பு ஓட்டுநர் பணியிடத்தை பூர்த்தி செய்யும்/ நிரப்பும் பொருட்டு SC(A) (G) எனும் இனசுழற்சியில் தகுதியான நபர்களிடமிருந்து 16.12..2025 முதல் 30.12.2025 வரை அஞ்சல் வழி/ நேரடியாக விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. பணியிட விவரம் பின்வருமாறு

| பொருள் | | | ஈப்பு ஓட்டுநர் |
|---|---|---|---|
| 1. | ஊதியம் | - | ரூ.19500-71900 Level-8 |
| 2. | வயது | - | ➢ 18 – 42 |
| 3. | 01.07.2025 அன்று அதிகபட்ச வயது வரம்பு இனம் வயது வரம்பு | - | 42 |
| 4. | மொத்த பணியிடங்கள் | - | 1 |
| 5. | இனசுழற்சி விவரங்கள் | - | 2) SC(A) (G) பட்டியல் இனத்தினர் முன்னுரிமை அடிப்படையில் அருந்ததியர் பொது பிரிவினர் |
| 6. | கல்வித் தகுதி மற்றும் பிற தகுதிகள் | - | ➢ 8ஆம் வகுப்பு தேர்ச்சி<br>➢ மோட்டார் வாகன சட்டப்படி தகுதியான அலுவலரால் வழங்கப்பட்ட செல்லத் தக்க ஓட்டுநர் உரிமம்<br>➢ 5 ஆண்டுகளுக்கு குறையாத முன் அனுபவம் பெற்றிருக்க வேண்டும். |
| 7. | விண்ணப்ப படிவம் | | விண்ணப்ப படிவம் https://cuddalore.nic.in/ என்ற இணையதள முகவரியில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் |
| 8. | விண்ணப்பக் கட்டணம் | - | ரூ.50/- (Block Development Officer(BP), Panchayat Union, Nallur என்ற பெயரில் வங்கி வரைவினை (DD) விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்பப்பட வேண்டும் |
| 9. | விண்ணப்பங்கள் பெறப்படும் காலம் | | 16.12.2025 முதல் 30.12.2025 வரை அலுவலக வேலை நாட்களில் காலை 10.00 மணி முதல் மாலை 5.45 மணி வரையில் விண்ணப்பங்களை நேரடியாகவோ அல்லது அஞ்சல் வழி மூலமாகவோ நல்லூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் அளித்திடவும் |
| 10. | விண்ணப்பிக்க கடைசி நாள் | | 30.12.2025 மாலை 5.45 மணி வரை |
| 11. | விண்ணப்பத்தை அனுப்ப வேண்டிய முகவரி | - | ஆணையாளர் / வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ), ஊராட்சி ஒன்றிய அலுவலகம், நல்லூர், கடலூர் மாவட்டம் பின்கோடு-606302 |

## நிபந்தனைகள்

தகுதியான விண்ணப்பதாரர்கள் https://cuddalore.nic.in/ என்ற ,இணையதள முகவரியில் இருந்து விண்ணப்ப படிவத்தினை பதிவிறக்கம் செய்து அனைத்து கலங்களையும் முழுமையாக பூர்த்தி செய்து, கல்விதகுதி, சாதிச்சான்று , ஓட்டுநர் உரிமம், முன் அனுபவசான்று உள்ளிட்ட அனைத்து சான்றிதழ்களின் சான்றொப்பம் இட்ட நகல்களை இணைத்து நிர்ணயிக்கப்பட்ட தேதிக்குள் விண்ணப்பித்திட வேண்டும்.

1. நிர்ணயிக்கப்பட்டுள்ள இனசுழற்சி, வயது மற்றும் கல்வி தகுதியுள்ள நபர்களிடமிருந்து வரப்பெறும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்கப்படும்.
2. தகுதியில்லாத விண்ணப்பங்கள் மற்றும் காலம் கடந்து பெறப்படும் விண்ணப்பங்கள் முன்னறிவிப்பு ஏதுமின்றி நிராகரிக்கப்படும்.
3. சுயமுகவரியுடன் கூடிய அஞ்சல் வில்லை ஒட்டப்பட்ட அஞ்சல் உறை 1 (10 x4 inches postal (cover) இணைத்து அனுப்பப்பட வேண்டும்.
4. மேலே குறிப்பிடப்பட்டுள்ள இனச்சுழற்சி மற்றும் இட ஒதுக்கீட்டின்படியே நியமனம் மேற்கொள்ளப்படும்
5. தகுதியுள்ள விண்ணப்பதாரர்களுக்கு நேர்காணல் நடைபெறும் இடம் மற்றும் தேதி குறித்த தகவல் அஞ்சல் மூலமாக அனுப்பி வைக்கப்படும்.

வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ.,)
நல்லூர் ஊராட்சி ஒன்றியம்.

15/12/25